ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இல: 12/2019 2019.12.18

வெளிநாட்டு தூதரகங்களின் தலைவர்கள்,
அனைத்து மாவட்டச் செயலாளர்கள்,
மற்றும் பிரதேச செயலாளர்கள்.

**2020ஆம் ஆண்டுக்காக வெளிநாடுகளில் வதியும் இலங்கை ஓய்வூதியர்களது உயிர்வாழ்வுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளல்**

01/2018 ஆம் இலக்க 2018.06.20 ஆம் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 21 தொடக்கம் 32 வரையுள்ள பிரிவுகளின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. மேற்படி சுற்றறிக்கையின் 21 ஆம் பிரிவிற்கமைய, 2020 ஆம் ஆண்டிற்குரிய உயிர்வாழ்வுச் சான்றிதழ்கள் 2019.12.01 ஆம் திகதி தொடக்கம் 2020.03.31 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி சுற்றறிக்கையின் 29 ஆம் பிரிவின் பிரகாரம், 2020.03.31ஆம் திகதி அன்று தரவுத்தளத்தில் உயிர் வாழ்வுச் சான்றிதழ் பதிவேற்றம் செய்யப்படாத ஓய்வூதியர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2020 மே மாதத்திலிருந்து நிறுத்தப்படும்.

03. www.pensions.gov.lk எனும் ஓய்வூதிய திணைக்கள இணையத்தள முகவரியில் வெளிநாட்டு ஓய்வூதியத்தின் கீழ் உயிர்வாழ்வுச் சான்றிதழின் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கமைய, பதிவிறக்கப்பட்ட உயிர்வாழ்வுச் சான்றிதழை முழுமையாகப் பூரணப்படுத்தி அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு தாங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

04. மேலும், 01/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 27 ஆம் பிரிவிற்கமைய,வெளிநாட்டு தூதரகங்களால் உறுதிப்படுத்தப்பட்டு முன்னிலைப்படுத்தப்படும் உயிர்வாழ்வுச் சான்றிதழ்கள் இயங்கலையினூடாக தரவுத்தளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

05. இரண்டு வருடங்களிற்கும் குறைவான காலம் வெளிநாடுகளில் வதிகின்ற, பிரதேச செயலகங்களால் ஓய்வூதியக் கோவைகள் பேணப்படும் ஓய்வூதியர்களது உயிர்வாழ்வுச் சான்றிதழ்கள் வெளிநாட்டு தூதரகங்களால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் விடயப் பொறுப்பு அலுவலர்கள் அத்தகவல்களை தரவுத்தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

06. ஓய்வூதியக் கொடுப்பனவு முகாமைத்துத்திற்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பு மிகவும் வரவேற்பிற்குரியது ஆகும்.

**ஒப்பம்**
**ஏ.ஜகத் டி டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்..